OS.No.42/2019
PW1 (Cross) – திரு.ராசாத்தி
நாள் 11.06.2025

<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

**1.** எனது தந்தை பெயர் மாப்பிள்ளைசாமி. எனது தாத்தா பெயர் பாக்கியம் கிருஷ்ணசாமி தேவர். எனது கணவரின் தந்தை பெயர் வேலுச்சாமி. வேலுச்சாமியின் தாயார் பெயர் குப்பம்மாள். குப்பம்மாளின் உடன் பிறந்தவர்கள் பெயர் குமராயி அம்மாள், பாக்கியம் கிருஷ்ணசேர்வை என்றால் சரிதான். குமராயி அம்மாளின் மகன் தான் சாயல்குடி பெரிய ஜமீன்தார் விவிஎஸ். அண்ணாசாமி பாண்டியன் என்றும், அவருடைய மகன் தான் இளைய ஜமீன்தார் சிவஞானபாண்டியன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**2.** அண்ணாசாமிபாண்டியன் தாய் மாமா தான் என்னுடைய தாத்தா பக்கியம் கிருஷ்ணசாமிதேவர் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த விவரங்களை அனைத்தும் எனது கணவர் தான் கூறினார் என்றால் சரிதான். இந்த வழக்கானது கார்த்தியாயினி நாச்சியார் மற்றும் அரண்மனைப்பாண்டியன் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்து கார்த்தியாயினி நாச்சியாருக்கும், அரண்மனைப்பாண்டியனுக்கும் உரிமை இல்லாததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டாவை ரத்து செய்தார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**3.** தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் ஆகும். நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கை திரும்ப பெற்று கொண்டு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி திரும்ப தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். திரும்ப இந்த வழக்கை தாக்கல் செய்ததற்கு வழக்கறிஞரிடம் விவரங்களை கூறியது எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 5 வருடங்கள் இருக்கும். தாவா சொத்திற்குரிய பட்டா என்னுடைய பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

**4.** எனது பெயரில் உள்ள பட்டாவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் விவசாயம் எதுவும் செய்கிறோமோ என்றால் சோளம், கம்பு போன்ற பயிர்கள் விவசாயம் செய்வோம். நான் தாவா சொத்தை அனுபவம் செய்வதை நிரூபிப்பதற்கு அடங்கல் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் தாவா சொத்தை பொறுத்து மானியம் பெற்றதற்காக ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

**5.** நான் வாங்கிய கிரைய சொத்தை எனக்கு பின்னர் கார்த்தியாயினி நாச்சியார் கிரையம் வாங்கியது மோசடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கார்த்தியாயினி நாச்சியார் தாவா சொத்தை கேரளாவில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு இளைய ஜமீன்தார் சிவஞானபாண்டியன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பெரிய ஜமீன்தார் அண்ணாசாமிபாண்டியன் தங்கராஜ்பாண்டியன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் மூலம் பவர் கொடுத்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் தான் எனது கணவரும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

**6.** 2ம் பிரதிவாதி அரண்மனைப்பாண்டியன் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் என்பதால் செல்வாக்கை பயன்படுத்தி பரமக்குடி கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து பட்டாவை ரத்து செய்தார் என்றால் சரிதான். அதனால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் இளைய ஜமீன்தார் சிவஞானபாண்டியன் தனக்கும், தாவா சொத்தில் உரிமை உள்ளதாக மனு செய்து தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு பல லட்ச ரூபாய் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**7.** தாவா சொத்தின் மதிப்பு அதிகம் என்பதால் இந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்ய இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது இளைய ஜமீன்தார் சிவஞானபாண்டியனுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் நானும், எனது கணவரும் பெற்ற நான்கு கிரைய ஆவணங்களும் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நானும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கனாது தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

ஒம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி